யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது

நூலக வெளியீட்டுப் பிரிவு

யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி

# விழியல்

வேனில் - 01 வைகறை - 03 2018 - புரட்டாதி - மார்கழி

"இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு - 2018"

தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோபர்

# வெளியீட்டுக்குழு

**காப்பாளர்**

அதிபர் திரு.ந.சர்வேஸ்வரன்

**ஆலோசனை**

திரு பி.பாலபவன் பிரதி அதிபர்

**ஆசிரியர்**

திருமதி லோ.சிவாநிதி

**கணினி வடிவமைப்பு**

திரு ஆ.வைகுந்தன்

## உள்ளே...


❖ குறள் அமுதம்

❖ ஆசிரியர் இதயம்

❖ இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு எனும் தலைப்பிலான மாணவர்களின் கட்டுரைகள், கவிதைகள்

❖ ஆசிரியமும் வாசிப்பும்

❖ தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ் பெறுவோர் விபரம்.

# குறள் அமுதம்



"கற்க கசடற கற்றவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"

என்பது வள்ளுவப் பெருந்தகை குறள் அமுதம். அதாவது "கற்றபின் நிற்க அதற்குத்தக" கற்றபின் கற்றவாறு ஒழுகுதல் வேண்டும். பரந்து விரிந்த அழகிய உலகுதனில் கல்வி ஒருவருக்கு அத்தியாவசிய தேவையாகிவிட்டது. இன்று கல்வி இல்லாத இடங்களே இல்லை. இதனைத்தான் ஔவையார் "கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என எடுத்துரைத்தார்.

நாம் எவ்வாறு கற்றபடி ஒழுகுதல் வேண்டும். இன்றைய உலகம் அறிவுசார் உலகம். அறிவுசார் உலகின் அச்சாணியாக அழகு சேர்ப்பது கல்வி. இதனைத் தான் வள்ளுவப் பெருந்தகை.

" கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றார்.

"இளமையில் கல்" என்கிறது. முதுமொழி இளமையிற் கற்கும் கல்வியானது பசுமரத்தாணி போல பதியும். இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள். இளமையிற் கற்கும் கல்வியானது நற்பிரஜைகளை உருவாக்குவதோடு நம் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளயும் மேம்படுத்தும். இதனால் தான் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றனர். இவ்வாறு கல்வியின் சிறப்புக்கள் ஆயிரம். இவ்வாறான சிறப்பு மிக்க கல்வியினை நாம் கற்றால் மட்டும் போதாது. அதன்படி ஒழுகவும் வேண்டும்.

அறநூல்கள், நீதிநூல்கள், புராணஇதிகாசங்கள் போன்றன நற்பழக்கவழக்கங்களை நூல்களின் வழியாக எடுத்துரைப்பிற்கு காரணம். கற்றவாறு நாம் ஒழுகுதல் வேண்டும் என்பதாகும்.

நீதி நூல்கள், உண்மைபேசுதல், நேர்மையாக வாழுதல், நன்றி மறவாமை, கூடி வாழுதல், உதவி செய்தல், தர்மம் செய்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களை தன்னகத்தே சிறைப்படுத்தியுள்ளன.

வாய்மைக்கு அரிச்சந்திரன், அஹிம்சைக்கு காந்தியடிகள், செஞ்சோற்றுக்கடனுக்கு கர்ணன், அன்பின் உறைவிடம் அன்னைதெரேசா, கல்வியில் சிறந்தவர் விபுலானந்தர், ஆறுமுகநாவலர் போன்றவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கெல்லாம் முன்மாதிரிகளாக மிளிர்கின்றனர்.

எமக்கு முன்மாதிரியாக விளங்கும் பெரியோர்கள் யாவரும் தாம் கற்ற கல்வியின் வழி நின்று ஒழுகியமையினாலேயே உயர்நிலையை அடைந்தனர்.

எனவே நாமும் கற்றதன் வழி ஒழுகுவோமேயானால் நாட்டின் சமாதானம் பலப்படும், கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் கட்டியெழுப்பப்படும். இனத்துவ முரண்பாடுகள் இழிவாக்கப்படும். 2018ஆம் ஆண்டின் தேசியவாசிப்பு மாத தொனிப்பொருளான "இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வாசிப்பு" எனும் தொனிப்பொருள் மெய்ப்படும்.

நாளும் கற்போம். கற்றவாறு ஒழுகுவோம். பயன்பல பெறுவோம்.

இதழாசிரியர்

கற்கும் விஞ்ஞானக் கலை மனிதனைக் கண்ணியம்
மிகுந்தவனாக உயர்த்துவதற்கு முன்பாக
அது முதலில் மனிதனைப் பற்றிய சர்வாம்சமான
ஞானத்தைப் பெற்றிருக்க வேண்டும்

கே.யுஷின்ஸ்கி

\- ரஷ்ய கல்வியியலாளர்

## நூலகமே செம்மை வாழ்வின் அடித்தளம்

கலையாத ஓவியமாய்
காலத்தா லழியாத
கலைநிறை நூலையெல்லாம்
கண்ணிமை போல் காத்து நிதம்

உலகின் கல்வியை
உயர்த்த பாடுபட்ட
உயர்த்த சிகரம்
உற்ற நண்பன்
நூலகம் தான் வேறில்லை.

உயர்ந்து பலனளிக்கும்
உத்தமர் போற்றும்
ஒப்பற்ற உலகமரம்
நூலகம் தான் வேறில்லை

மனதிற்கு அமைதியையும்
மூளைக்கு அறிவையும்
உடலுக்கு ஓய்வையும்
ஓயாது வழங்கி

அரிய பல நூல்களையும்
அறிவுதனை ஊட்டுவதற்காய்
மக்களின் மத்தியிலே
நடமாட அனுமதித்து

உலகின் ஒப்பற்ற
புரிந்துணர்வு மனிதனை
உருவாக்கும் வளநிலையம்
நூலகம் தான் வேறில்லை

பலதுறை நூல்களையும்
ஓரிடத்தில் வழங்கி
உறவாடும் ஓர் நிலையம்
நூலகம் தான் வேறில்லை

பலதுறை அறிவையும்
அருளாய்த்தரும் ஆலயமாய்
பிரச்சினைக்கு தீர்வு காணும்
நீதிமன்ற தீர்ப்பாளனாய்

இனங்களின் இணக்கப்பாடாய்
இணக்கமதை வழங்கும்
புரிந்துணர்வை ஏற்படுத்தும்
நடுநிலையாம் நூலகம்

அறிவுதனை அள்ளித்தரும்
உலகின் அதிசயம்
நூலகம் தான் வேறில்லை

ஏழை பணக்காரர்
உயர்ந்தவர் தாழ்ந்தவர்
இன ஜாதி, மத பேதமின்றி
நூல்களை அள்ளித்தந்து

வாழ்வை செம்மையாக்கும்
அனுபவத்தை ஒன்று சேர்த்து
நூலாக்கி எமக்களித்த
பேரறிஞர் வாழுமிடம்
நூலகம் தான் வேறில்லை

விஞ்ஞானி மெஞ்ஞானி
கவிஞர் கதாசிரியர்
ஆசிரியர் வைத்தியரென
உயர்ந்தோரை உயர்த்திய

நம்வாழ்வை செம்மையாக்கும்
எதிர்கால இறைதூதன்
அறிவின் மறுவடிவம்
நூலகம் தான் வேறில்லை

உலக பாரம்பரியமதை
தன்னகத்தே உள்ளடக்கி
யாதும் ஊரே யாவரும் கேளீர்
எனும் கனவுதனை
நனவாக்க நூலகம் வாரீர்!

நல்ல நல்ல நூல்கள் தான்
நாடுங்கள் தேடுங்கள்
உலகமும்மை ஏற்கும்
உம் வாழ்வு சிறக்கும்

திருமதி.லோ.சிவாநிதி
இதழாசிரியர்

தனிமைத் தீவில் தள்ளப்பட்டால் என்ன
செய்வீர்கள் என்று கேட்ட போது புத்தகங்களுடன்
மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன்
என்று பதிலளித்தார்.

நேரு

# இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி ஒன்றுபட்டு வாழ்வோம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒற்றுமையின்றேல் அனைவரும் தாழ்வு"

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"

என்பன முதுமொழிகள் ஆகும். இதற்கு இணங்க நாம் எல்லோரும் நம் நாட்டு மக்கள் எல்லோரும் ஒரு குடையின் கீழ் திரண்டு ஒற்றுமையாக வாழ்வோம்.

ஆறறிவு படைத்த மனித இனம் அன்பினால் எதனையும் சாதிக்கலாம். பல்லின மக்கள் வாழும் போது ஐக்கிய உணர்வுடன் வாழ்ந்தாலேயே சமாதானம் தோன்றும். நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பேணப்படவும் சமாதானம் தேவை. நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் கலைகலாசார பண்பாட்டு விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்படவும் சமாதானம் தேவை. இளைஞர் சமுதாயம் எழுச்சி பெறவும் அவர்களது உரிமைகளையும், உயிரையும் பாதுகாக்கவும் சமாதானம் தேவை என்பது யாவரும் அறிந்ததே. குரோதங்களும் வன்செயல்களும் இன்றி நாடு நலம் பெற்றால் தான் உல்லாசப் பயணத்துறை எழுச்சி பெற்று வளர்ச்சி பெறும். சர்வதேச ரீதியாக எமது நாடு அப்போதுதான் மதிக்கப்படும். இதற்கெல்லாம் என்ன வேண்டும்? சமாதானம் வேண்டும், ஒற்றுமை வேண்டும், புரிந்துணர்வு வேண்டும், சகிப்புத்தன்மை வேண்டும்.

எனவே அனைவரும் ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைந்து சமாதானமாக வாழ முன் வாருங்கள். சிறந்த சமூகப் பொருளாதார கலை கலாசார பண்பாட்டு அம்சங்கள் நிறைந்த நாட்டை நாம் காண வேண்டும்.

எனவே பகைமைகளையும், கருத்து பேதமைகளையும் மறந்து அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்து சிறந்த நாட்டைக் கட்டி எழுப்புவோம். மக்கள் அனைவரும் சமாதானம் பிறக்க ஒன்றுபட்டு கைகோர்த்து நிற்பதோடு சமாதானம் பிறக்க ஓர் அணியாய் திரள்வோம்.

பி.குகானந்தி

தரம் : 10 **D**

மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தை
வெளிக்கொணர்வது கல்வி

\- விவேகானந்தர்

## இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு

நாம் இலங்கையர்கள் மும்மொழிகளும் நால்வகை இனங்களும் கூடி நிற்கும் திருநாட்டில் வாழும் குடிமக்கள். எமது நாட்டின் பராம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் உயிருள்ள அளவும் போற்றிக்காக்க வேண்டிய கடமை எமக்குள்ளது. ஆனால் இத்தகைய அளப்பரிய அரும்பெரும் பணியை எம்மால் தனித்து நிற்பதால் நிறைவேற்ற முடியமா என்ன? எனவே தான் காலத்திற்கு காலம் தோன்றிய, தோன்றுகின்ற பொதுநலவாதிகள் பலரும் இனங்களுக்கிடையேயான நல்லுறவை வளர்க்கவும் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் பல முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். அவர்கள் செய்த மற்றும் செய்கின்ற அத்தகைய முயற்சிகளுள் தமது கருத்துக்களைப் பல்வேறு நூல்களினூடாக வலியுறுத்துவதும் ஒன்று. அதனால் தான் இவ்வருட வாசிப்பு மாதத்தின் கருப்பொருள் இக்கருத்தைக் கோடிட்டுக்காட்டும் வகையில் "இனங்களுக் கிடையேயான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு" என்றவாறு அமைந்துள்ளது.

இக்கருப்பொருளோடு ஒன்றி நாம் புரிந்துணர்வினைப் பற்றி ஆராய முன்பு இனங்களைப் பற்றிச் சற்று நோக்குவோம். எம்முடைய ஈழநாட்டிலே தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர் என்ற நான்கு வெவ்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் மொழியால் பழக்கவழக்கங்களால், கலாச்சாரப் பண்பாடுகளால் பராம்பரியங்களால் ஏன் மதங்களால் கூட வேறுபட்டிருந்தாலும் மனங்களால் ஒன்றிச் செயற்படுகின்றனர். இவர்களது இத்தகைய செயற்பாடு புறநானூற்று வசனமான "யாதும் ஊரே யாவருங் கேளீர்" என்பதனை நினைவுபடுத்துவதாக உள்ளது. "இத்தனை ஒற்றுமையுடன் இனங்கள் சேர்ந்து வாழ்வதில் வாசிப்பும் பாரிய பங்களிப்பினை ஆற்றுகிறது என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? ஆம். நம்பத்தான் வேண்டும். இச் செல்வம் கொழிக்கும் இந்து சமுத்திரத்தின் முத்திலே வாசிப்பு வீதம் மிகவும் அதிகம். சொல்லப் போனால் தென்னாசியாவிலேயே கல்வியறிவு வீதம் கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாமிடம் பெறுகிறது. கிட்டத்தட்ட 92.3% மக்கள் எம்நாட்டில் கல்வியறிவுடன் திகழ்கின்றனர். மேலும்" தி.த.சரவணமுத்துப்பிள்ளை, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, உதுமாலெவ்வை முகமது அதீக், அகளங்கன்" என்று பல்வேறு கவிமணிகளையும் இலக்கிய ஆசிரியர்களையும் உலகிற்குப் பெற்றெடுத்துத் தந்த இலங்கைத்தாய் மண்ணில் வாசிப்புப் பழக்கம் எப்படி வேரூன்றாமல் இருக்க முடியும்? நம் நாட்டின் பல்வேறு இனங்களையும் சார்ந்த "மார்ட்டின் விக்கிரமசிங்க, கவிஞர் சோலைக்கிளி, ஆ.மு.ஷரிபுதீர், கிறிஸ்டர் ஜோர்ஜ்" போன்ற பல எழுத்தாளர்களும் மக்களைத் தத்தமது படைப்புக்களினூடாக வாசிக்கத் தூண்டிய வண்ணமே உள்ளனர். மேலும் வேறுபட்ட இனத்தவரால் எழுதப்பட்டது. ஆயினும் மக்கள் வேறுபாடின்றி வாசிக்கத்தக்க வகையில் இவர்களது ஆக்கங்கள் சுதேச மொழிகளிலும் சர்வதேச மொழியிலும் மொழி பெயர்க்கப்படுவதை நாம் காண்கின்றோம்.

இன்றைய காலத்தில் மட்டுமன்றி அன்றைய காலத்திலும் வாழ்ந்த புலவர்களும் அறிஞர்களும் கற்றவர்கள் பல்வேறு இனத்தவருடனும் காட்டும் இணக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். ஊதாரணமாக,

"யாதானும் நாடாமல் ஊராமல் என் ஒருவன்

சாந்துணையும் கல்லாதவாறு"

என்ற திருவள்ளுவரின் திருக்குறள் முத்தொன்றைக் குறிப்பிடலாம். இக்குறளின் பொருளானது "கல்வி கற்றவனுக்கு எந்தவொரு நாடும் தனது நாடாகவும் எந்தவொரு ஊரும் தனது ஊராகவும் இருக்கையில் ஒருவன் சாகும் வரையில் கல்லாதிருப்பது ஏனோ?" என்பதாகும். அதாவது பண்டைய காலந்தொட்டே பல நூல்களை வாசித்துக் கற்றறிந்த கல்விமான்கள் அனைத்து நாட்டினையும் ஊரினையும் சேர்ந்த மக்களுடன் ஒற்றுமையாகப் பல்லினப் புரிந்துணர்வுடன் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு இக்குறட்பா சிறந்ததோர் உதாரணமாகும்.

இனி நாம் புரிந்துணர்விற்கும் வாசிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பிற்கு வருவோம். உலக நாடுகளில் பல அறிஞர்களும் இலக்கியத்துறையின் ஜாம்பவான்களும் வாசிப்பைப் புரிந்துணர்வுடன் தொடர்புபடுத்தியுள்ளனர். அவர்களில் அமெரிக்க நாட்டவரான டேவிர் ஆர்க்மன் என்பவர் [David Argman] என்பவர் "If one has the ability to understand the every character of a book, then he is the one who can have a good understanding with his fellow people" என்று குறிப்பிட்டுள்ளார். இதன் கருத்தாவது " எவனொருவன் ஒரு புத்தகத்திலுள்ள ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் புரிந்து கொள்ளக் கூடிய ஆளுமையைக் கொண்டிருக்கிறானோ அவனே தன்னுடன் வாழும் சக மனிதர்களுடனும் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள வல்லவன்" என்பதாகும். மேலும் இங்கிலாந்து நாட்டவரான "ஹாரி பாட்டர்" என்ற நாவலை எழுதிப் புகழடைந்த ஜே.கே.ரோலிங் [ J.K.Rowling] என்ற பெண் எழுத்தாளர் கூறுகையில்,

"If you read all the books in the world then you will have a key to the universe" என்கின்றனர். அதாவது நீங்கள் உலகிலுள்ள அனைத்துப் புத்தகங்களையும் வாசித்தால் இந்தப் பிரபஞ்சத்தைத் திறப்பதற்கான சாவியினைக் கொண்டிருப்பவர் ஆவீர்கள். என்பதே இதன் கருத்தாகும். அதாவது பிரபஞ்சம் என்பது இனம், மதம், மொழி அனைத்தையும் கடந்து அவையனைத்தையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டது. அதாவது எவனொருவன் பிரபஞ்சத்தினைத் திறப்பதற்கான சாவியினைப் பெறுகிறானோ அவனே அதற்குள் அடங்கியிருக்கும். ஒவ்வொரு இனத்தையும் மொழியையும் மதத்தையும் புரிந்து கொண்டவனாகின்றான்.

இதன்படி பார்க்கும் போது வாசிப்பு என்பது வெறுமனே வீட்டுடனோ, பாடசாலையினுடனோ ஏன் நூலகத்துடனோ மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது ஒரு பரந்துபட்ட வாய்ப்பு. இன்றைய காலத்தில் அதுவும் தொழினுட்பசாதனங்களின் வளர்ச்சி மிகுந்து விட்ட பொழுதில் வாசிக்கும் ஊடகங்கள் வெறுமனே நூல்கள் மட்டுமல்ல. நாம் வாசிக்க விரும்பினால் நூலகத்தினையே எம்மால் எம்முன் கொண்டு வரமுடியும். இன்றைய இணைய

நூலக வசதி இதனைச் சாத்தியமாக்கியுள்ளது. ஆம்! இணைய வசதி மட்டும் இருந்தாலே போதும். எம்மால் கணினித்திரை, தொலைபேசித்திரை வழியாகவே நூலகத்தினுள் நுழைந்து விரும்பிய நூல்களை நொடிப்பொழுதில் பெற்று வாசிக்க முடியும். சரி வாசிப்பது பிரச்சினை இல்லை. ஆனால் இவ்வாசிப்பு எவ்வாறு புரிந்துணர்விற்கு வழிவகுக்கிறது. வாருங்கள் அதனை அடுத்த பந்தியிலே நோக்குவோம்.

நாம் எல்லோருமே திருக்குறள் படித்திருக்கிறோம். ஆனால் அது எந்த இனத்தைச் சேர்ந்தவரால் எழுதப்பட்டது என்பதனை உங்களால் கூறமுடியுமா? ஆக " திருவள்ளுவர்" என்ற பெயரை மட்டுமே வைத்துக் கொண்டு அவரது இனத்தை அறிவது அசாத்தியமே. பல அறிஞர்கள் திருவள்ளுவர் தமிழர் என்றும் சமணர் என்றும் வடநாட்டவர் என்றும் பலவாறு வாதிட்டாலும் இதற்கான ஒரு தெளிவான விடை இன்னமும் கிடைக்கவே இல்லை. இன்றைய காலத்தில் திருக்குறளானது ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட இனத்தவரால் வாசிக்கப்படுகின்றது. குறித்த இனத்தவருக்கு மட்டுமன்றி வாசிக்கும் அனைவருக்கும் பொருந்தும்படியான வாழ்க்கைக் கருத்துக்களை இந்நூல் கூறுவதே இதற்கான காரணமாகும். இன்றைய உலகில் பல்வேறு இனத்தவரும் திருவள்ளுவரைத் தமது இனத்தவராகச் சுவீகரித்துக் கொள்ளவே விரும்புகின்றனர். இது வாசிப்பினால் விளைந்த பயனல்லவா? வள்ளுவரின் கருத்துப்படி,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"

என்ற குறள் "நாம் ஒன்றை ஐயம் திரிபறக் கற்றுக் கற்றதற்கிணங்க ஒழுகுதல் வேண்டும்" என்ற கருத்தினை உணர்த்துகிறது. அதற்கிணங்க நூல்களை வாசிப்பவர்கள் அவற்றிலுள்ள கருத்தினைப் புரிந்து கொண்டு அதன்படி ஒழுகத் தலைப்படுகின்றனர். இவ்வாறு பல்வேறு இன மக்களினைப் பற்றியும் அவர்களினுடைய வாழ்க்கை, பண்பாட்டு அம்சங்களையும் நூல்களினூடாக வாசித்து அறிந்து கொள்ளும் உலக மக்கள் அவற்றை மதிக்கவும் புரிந்து கொள்ளவும் தாமாகவே கற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு தான் செயற்றிறன் மிக்க வரையில் வாசிப்பானது இனங்களுக்கிடையிலேயான புரிந்துணர்வினை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறு இனங்களுக்கிடையே புரிந்துணர்வானது உருவாகின்றமையால் ஏற்படும் நன்மைகள் பல இனங்கள் ஒருமித்துச் செயற்படுவதனால் ஒரு நாடு பல்வேறு வகைகளில் நன்மையடைகின்றது. நாடானது பலவழிகளிலும் அபிவிருத்தி அடைவதற்கு இவ் ஒற்றுமையும் புரிந்துணர்வும் மிகவும் துணை புரிகின்றன. மக்களே நாட்டின் பலமாவார்கள். நாட்டின் பெருமையையும் சிறப்பையும் தாங்கி நிற்கும் தூண்கள் அந்நாட்டுக் குடிமக்களே. எனவே அவர்களின் கல்விநலமே நாட்டினை முன்னேற்றுகிறது என்பதனை நாம் அறியலாம். கல்விநலம் வாசிப்பால் பிறக்கிறது. வாசிப்பு புரிந்துணர்வைப் பிரசவிக்கிறது. எனவே வாசிப்பினால் தோன்றும் நலன்கள் ஒரு நாட்டையே ஏன் உலகத்தையே முன்னேற்றக் கூடியவை.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்றார். சார்ல்ஸ் டார்வின் அவன் அடையும் அந்தப் பூரணத்துவத்தினை புரிந்துணர்வும் அடங்குகிறதல்லவா? அது தான் வாசிப்பின் மகத்துவம். நாம் வளர்ந்து வரும் சமுதாயத்தினர். எமது நாட்டையும் நாட்டு மக்களையும் முன்னேற்ற வேண்டிய பணி நம்முடையது. எனவே வாசிப்பைத் துணை கொண்டு இனங்களுக்கிடையிலேயான புரிந்துணர்வை வளர்த்து எமது இலக்கை நோக்கி முன்னேறுவோமாக…

புஷ.வைஷாலி

தரம் **11 E**

மனிதனுடைய பண்படாத மனத்தைப் பண்படுத்தி உயர்ந்த சிந்தனைகளை உருவாக்குவது கல்வி

\- லெனின்

## இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு

உலகில் பரந்துகிடக்கும் கடலைப் போலவே பல இனங்களும் காணப்படுகின்றன. இங்கே எதற்கும் பஞ்சமில்லை என்றாலும் புரிந்துணர்வுக்கு பஞ்சம் அதிகமாகவே இருக்கின்றது. அதனால் தான் உலகத் தேவைக்கான உணவை உற்பத்தி செய்தும் பல நாடுகளில் மக்கள் பட்டினியால் மரிக்கின்றனர். அதீத தொழினுட்பம் இருந்தும் ஓசோன்படைஓட்டை விசாலமாகின்றது. தொழில் வாய்ப்புக்கள் பல இருந்தும் வேலையில்லாப் பட்டதாரிகள் போராட்டங்கள் வெடிக்கின்றன. இயற்கை மரணம் எய்தவிருக்கும் முதியவரின் உயிரை தொழினுட்பம் பிடித்து வைத்திருக்க வாழவே தொடங்காத இளைஞனின் உயிரை காசு பிடுங்கி விடுகின்றது. இச் சீர்கேடான நிலையை சீரமைக்கும் பாலமாக வாசிப்பு காணப்படுகின்றது. எழுத்து ஒரு ஆயுதமென அறிஞர் ஒருவர் கூறியிருந்ததைப் போல இன்று வாசிப்பு புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்நாட்டில் தமிழர், முஸ்லீம், சிங்களவர், பறங்கியர் என இனங்கள் வாழ்கின்றனர். உலகளாவிய ரீதியில் இவ் எண்ணிக்கை பன்மடங்காகின்றது. உலகிலுள்ள அனைவரையும் ஒரே மொழியில் கதைக்க வைப்பதென்பது முடியாத காரியம். அதற்கு பிரதேச வழக்கம் முதல் பொருளாதாரம் வரை பல தடைகள் உண்டு. அப்படியென்றால் ஒரு மொழியில் எழுதப்பட்ட ஒரு விடயத்தை வேற்றுமொழி இனத்தவர்கள் எவ்வாறு புரிந்து கொள்வர் என்பது பலர் மனங்களில் ஏற்படும் கேள்விக் குறியாக இருக்கின்றது. அதற்கு பதிலாகவே மொழி பெயர்ப்பு அமைகின்றது. உலகின் ஒரு மூலையில் இருக்கும் ஒரு எழுத்தாளன் உலகெங்கும் பிரசித்தி பெறுவதற்கும் அதுவே காரணம். உலகப் புகழ் பெற்ற கிறிஸ்தவரின் முதல் நூலாகிய பைபிள் இன்று அனைத்து கிறிஸ்தவர் கையிலும் தவழ்கின்றது. உலகப் பொதுமறை என சிறப்பிக்கப்படும் திருக்குறளை வாசித்து ஒரு பிரான்சியன் தனது கருத்துக்களை மாற்றிக் கொள்கின்றான். இந்த இரு நூல்களுமே உலகிலேயே பல மொழிகளில் பெயர்க்கப்பட்டவை. இதன் முக்கியத்துவம் அறிந்திருப்பதற்கு காரணம் வாசிப்புத் தானே?

1453 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டதை தொடர்ந்து பபிலோனியா நூலகத்திலிருந்த புதைந்த புத்தகப் பொக்கிஷங்கள் வெளிவந்தது. உலகவரலாறு அறிந்ததே. கிரேக்கர், உரோமர் பிறக்கும் போதே புத்திசாலியாகப் பிறந்து விடவில்லை. அவர்களது அறிவிற்கு ஆதாரம் இந்நூல்கள் தான். இன்று இலியட்ஒடிசியன் புத்தகங்களை நினைவு கூறுகின்றோம். ஷேக்ஸ்பியரின் புத்தகத்தில் எழுதப்பட்டவற்றை ஆசிரியர்கள் மேற்கோள் காட்டுகின்றனர். தம்இனத்தை சேராதவன் என்று எப்போதுமே நூலாசிரியர்களோ அவர்களின் புத்தகங்களோ ஒதுக்கப் படுவதில்லை. இங்கே வாசிப்பானது இனங்களுக்கிடையே புரிந்துணர்வை

ஏற்படுத்துவது எப்படி என்றால் இனம், மொழி, மதம் என்ற பேதங்களை இல்லாது செய்வதனூடாகவாகும்.

ஒரு இனத்தவரின் படைப்புக்களை வாசிக்கும் போது அவரது இனத்தின் பண்பாடுகள் வெளிப்படுவதை உணரலாம். உதாரணமாக அரேபியர்கள் இலக்கியங்கள் படைக்கும் போது பாலைவனங்கள், ஒட்டகங்கள், தண்ணீரற்று களைப்பை ஏற்படுத்தும் தாகம், பேரீச்சம்பழம் என தமது வாழ்வியலோடு இணைந்தவற்றை பயன்படுத்தியிருப்பர். சோவியத் ரஷ்யாவின் கதைகளில் அவர்களது நம்பிக்கைகளின் வெளிப்பாடு இருக்கும். சீன இலக்கியங்களிலும், ஜப்பான் இலக்கியங்களிலும் தற்காப்புக் கலைகளாகிய கராத்தே, குங்க்பு, ஜூடோ பற்றிய குறிப்புக்கள் இருக்கும். இங்கே தான் வாசிப்பு இனங்களிடையே பாலத்தை ஏற்படுத்துகின்றது.

ஒருவரின் பண்பாடுகள், கலாசாரம், நம்பிக்கைகள் பற்றி தெரிய வரும் போது அவர்களின் மனோநிலை பற்றிய புரிந்துணர்வு ஏற்படுகின்றது.

ஆன் பிராங்கினது டயறி இன்றும் அந்த யூதச் சிறுமியை நினைவு கூருகின்றது. தனது சோகங்களையும், அனுபவங்களையும் எழுத்தாய் பொதித்த "ஆன்பிராங்க்" இறந்த பின்னும் மேற்கோள்காட்டும் அளவிற்கு சிறப்பிக்கப்படுவது இனங்களுக்குக்கிடையிலான புரிந்துணர்வை காட்டி நிற்கின்றது. இங்கே ஆன் பிராங்கை யூத இனத்தவளாக யாரும் பார்ப்பதில்லை. மாறாக தம்மில் ஒருவராய் நினைக்கின்றனர். அதனால் தான் என்னவோ "புத்தகங்களின் பக்கங்களிடையே யதார்த்தவாதிகள் வாழ்கின்றனர்" என ஒரு அறிஞர் குறிப்பிடுகின்றார்.

திருக்குறளை எடுத்துக் கொண்டால் அது மதம் பற்றியோ இனம் பற்றியோ பேசவில்லை. மாறாக அறம் பற்றிப் பேசுகின்றது.

"தெய்வந் தொழா ஆழ் தொழுநனை தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை"

இங்கே தமிழர் பண்பாடு நிலைக்கின்றது. தெய்வத்தை வணங்காது கணவனை இறைவனாக நினைத்து வணங்கும் பெண் "பெய்" என்று கூறினால் மழையும் பொழியுமாம். இது பண்பாட்டைப் போதிப்பதோடு புரிந்துணர்வுக்கான பாலமாகவும் அமைகின்றது.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

என்று வழங்கப்படுவதில் நாலடியாரும் திருக்குறளும் முறையே சமண முனிவர்கள், திருவள்ளுவரால் எழுதப்பட்டன. அங்கே அவர்களது சமயத்தை பொருட்படுத்தவில்லை. அவர்களது கருத்திற்கே முக்கியத்துவம் கிடைக்கின்றது. சி.வி வேலுப்பிள்ளையின் கவிதைகள் மிகவும் பிரசித்தமானவை. இன்று மலையக மக்கள் பக்கம் பலர் பார்வையும் விழுவதற்காக அமைந்த அடித்தளம், அவரது "In the tea garden" எனும் கவிதை தொகுப்பு மொழி பெயர்க்கப் பட்டதை தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்கள் வேற்று இன தலைவர்களால் கவனிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கே வாசிப்பானது இருவேறு

இனங்களை இணைக்கும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஆயுதமாக உள்ளதைக் காண்கின்றோம்.

விபுலாநந்தர் தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றிய பெரியவராவர். எவ்வளவோ தமிழ்ப்பற்று இருந்தும் சாஸ்திரங்கள் சமஸ்கிருத இலக்கியங்களை மூல மொழியில் கற்பதற்காக சமஸ்கிருத மொழியை கற்றுத் தேர்ந்தார். இவ்விடத்தில் விபுலாநந்தர் மொழிகளை ஒரே சமமான பார்வையில் பார்த்திருக்கின்றார் என்பது திண்ணம். வீரமாமுனிவர் எனக் குறிப்பிடப்படுபவர் ஒரு சமணப் பாதிரியார். தமிழ் இலக்கியங்களினால் கவரப்பட்டு தேம்பாவணியை படைத்திருக்கின்றார். இங்கே இனங்கள் தடையாக இருக்கவில்லை.

முழுமையாக "வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது" என ஆங்கில எழுச்சியின் தாரகை பிரான்சிஸ் பேகன் கூறியிருப்பது உண்மையே. ஒரு பூரணமான மனிதன் என்பவன் புரிந்துணர்வு கொண்டவனாகவும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் அற்றவனாகவும் இருப்பான் என்பதில் எந்த தவறும் இல்லை. வாசிப்பு ஒரு மனிதனின் தனிப்பட்ட கருத்துக்களையும் மாற்றவல்லது. அது போலவே வாசிப்பானது இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தக் கூடியது. வாசிக்கும் போது குறித்த இனத்தின் பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும் ஆழ்ந்து பார்க்கும் போதுதான் உண்மையான புரிந்துணர்வு பிறக்கின்றது. எனவே சிறந்த வாசிப்பை மேற்கொண்டு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்ப்போம்.

ஜெ.ஜெயமதுரா

**Grade 11 F**

ஒரு குழந்தையுடைய வாழ்க்கையோடு யதார்த்த நிலையை பொருத்துவதே கல்வி

\- பெஸ்டலோசி

## இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு

இனம் என்பது ஒரு தேசத்தில் பொதுவான மொழி, பொதுவாக வாழும் பகுதி, பொருளாதார வாழ்வு மற்றும் மன இயல்பு ஆகிய எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்று வரலாறு ரீதியாக உருவாகிய நிலையான சமூகம் ஆகும். இதனடிப்படையில் இனங்களாக தமிழர், சிங்களவர், முஸ்லீம், இந்திய தமிழர் என்போர் வாழ்கின்றனர்.

நாம் ஒற்றுமையாகவும், புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு என்பவற்றை கடைப்பிடித்து ஒற்றுமையாக வாழ வேண்டும். இன்று எம் நாட்டில் இவை இல்லாத காரணத்தினால் பல பிரச்சினைகள் ஏற்படுவதுடன் ஒட்டு மொத்தமாக எல்லா மக்களும் பாதிப்புக்குள்ளாகின்ற நிலை ஏற்படுகின்றது.

பொதுவாக அரசியல் ரீதியாகவே இன பிரச்சினை உருவாகின்றது. இன, மத, மொழி பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதம் என்கின்ற உயரிய பூட்கையை முன்னிறுத்தி மக்கள் அரசியல் செய்யக் கூடிய அரசியல் தலைமைகள் உருவாக்க வேண்டியது. இன்றைய காலத்தினுள் கட்டாயமாக இருக்கின்றது. மேலும் புரிந்துணர்வின்மை, சந்தேகம், நம்பிக்கையீனம், பகையுணர்வு, விரிசல், பயம் ஆகியன இனத்தால், மதத்தால், மொழியால், பிரதேசத்தால் வேறுபட்ட மக்களுக்கு இடையில் தலைவிரித்தாடி வருவதை தாம் கண்ணூடாகக் காணமுடிகின்றது.

பல்லின மக்கள் கூட்டங்களை கொண்ட எமது நாட்டில் 1948 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு, நல்லிணக்கம், ஐக்கியம், சமரசம், சகவாழ்வு, சகோதரத்துவம், சகிப்புத்தன்மை ஆகியன பேச்சளவில் மாத்திரமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினை என்ற பெயரில் இனங்களுக்கு இடையிலான இப்பிரச்சினைகளே பூதாகரம்எடுத்து உள்ளன. இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நீடித்து நிலைத்து நிற்பதற்கு சுயஇலாப அரசியல் தலைமைகளே அடிப்படைக் காரணம் என கூறலாம். எனவே மானுடம் தழுவிய புதியதொரு அரசியல் கலாசாரம் இந்நாட்டில் உருவாக்கப்பட்டு முன்னெடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

மக்கள் முன்பொரு காலத்திலே மிக நெருக்கமாக இருந்த சூழல் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான சமூக சூழலையே மக்கள் வரவேற்கின்றனர். ஆனால் இங்கு இனங்களைப் பிரித்தாழ்வதன் மூலம் அரசியலில் சொந்த நிகழ்ச்சி நிரல்களை சுய நலநன்மைகள் நிறைவேற்றி வருகின்றனர். அவ்வாறு அல்லாமல் என இனமக்களும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து திகழ வேண்டும்.

அதில் தேர்தல் காலங்களிலும் இனப்புரிந்துணர்வு இன்மையைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே எல்லா மக்களையும் இன, மத பேதமின்றி புரிந்துணர்வுடன் வாழ்க்கை நிலையினைக் கொண்டு செல்வதன் மூலம் இத் தேசமும் மக்களும் ஒற்றுமையாக வாழ வழி வகுக்கும்

செல்வன் : சரவணபவன் வாசுகன்

கலை 12A

## இனப் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வாசிப்பு

"தலைகுனிந்து என்னைப்பார் தலை நிமிர்ந்து வாழ வைப்பேன்" என்ற கூற்றின் ஊடாக நூல்களின் சிறப்பும் வாசிப்பின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒரு தாயின் கருவறையில் இருந்தே குழந்தைகளுக்கு வாசிப்பை வளர்க்க வேண்டும். வாசிப்பு என்பது வெறும் அறிவு விருத்திக்காக மட்டும் அல்ல. ஒரு மனிதன் பூரணமடைய வேண்டும் ஆயின் சிறந்த நூல்களை வாசிக்க வேண்டும். இதனால் தான் வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்று கூறியுள்ளனர். சிறுபராயம் முதல் சிறுவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த செய்யச் வேண்டும். ஒருவன் சிறந்த அறிஞர்களை சந்திக்க வேண்டுமாயின் நூல்களை வாசிக்க வேண்டும். " வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும்" என நெல்சன் மண்டேலா கூறியுள்ளார். இதன் ஊடாக வாசிப்பின் மகிமையை அறிந்து கொள்ள முடியும்.

வாசிப்பு என்பது புதிய பல தகவல்களை பெற்றுக் கொள்ள துணைபுரியும் ஒன்றாகும். வாசிப்பதன் மூலம் எழுத்தாற்றல், மொழியாற்றல் என பல விடயங்கள் வளர்க்கப்படுகின்றது. வாசிப்பு என்பது எரிச்சலூட்டும் ஒரு விடயமல்ல அது எதிர்கால வெற்றியின் திறவுகோல் சுவாரஷ்யமான வாசிப்பில் ஒரு புறம் மகிழ்ச்சியும் இன்னொரு புறம் அறிவும் வளர்ச்சி அடைகின்றது. வாசிப்பானது மனிதனை மனிதனாக வாழ வைக்கும். அதாவது விடயம் தெரிந்த, அறிந்த அறிவு பெற்ற ஒருவனாக உருவாக்கும் வாசிப்பு மூலம் நமது கலாசாரம், பண்பாடு போன்றவற்றை அறிந்து கொள்ள முடியும். வாசிப்பை நம் உயிர் மூச்சாக கொள்ள வேண்டும். அதிகளவான நூல்களை வாசிப்பதன் ஊடாக ஏனையோரை சிறந்த முறையில் வழிநடத்தவும் நம்மை செம்மைப்படுத்தவும் வாசிப்பு நமக்கு துணைபுரிகின்றது. வாசிப்பதற்கு வயதெல்லை ஒன்று இல்லை சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை வாசிக்க முடியும். வாசிப்பது என்பது ஒரு குறித்த இனத்திற்கோ சமூகத்திற்கு உட்பட்டது அல்ல.

இன்றைய வளர்ந்து வரும் உலகில் வாசிப்புதன்மை அற்று வருகின்றது. ஓய்வு நேரத்தில் நூல்களை வாசிப்பது என்பது இன்று அரிய ஓர் விடயம். தொழில்நுட்ப வளர்ச்சி எமக்கு நன்மையானதாகவே இருந்தாலும் ஒரு சில தீமைகளை எமக்கு தருகின்றது. தொழினுட்ப சாதனங்கள் இவ் வாசிப்பு பழக்கத்தை இல்லாது செய்கின்றது. வாசிக்கின்ற தன்மையும் வாசிப்பவர்களின் அளவு குறைந்ததினாலுமே நாட்டில் நடைபெறும் பிரச்சினைகளுக்கு காரணம் எனலாம். இன்று நடைபெறும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக இனப்புரிந்துணர்வுஇன்மை காணப்படுகின்றது. இப் பிரச்சினைகள் உருவாக வாசிப்பு தன்மை அற்ற ஒரு சமூகமே காரணம் ஆகும். நாட்டில் பொறுப்பு மிக்க பதவியில் இருக்கும் அதிகாரிகளான ஆட்சியாளர்கள் புரிந்துணர்வு அற்றவர்களாக காணப்படுவதும் இனப்புரிந்துணர்வின்மைக்கு ஒரு விதத்தில் காரணம் இனங்களுக்கிடையான ஒற்றுமையே நாட்டின் உடைய ஒற்றுமை.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வளர்க்க வாசிப்பே சிறந்த ஓர் வழிமுறையாகும். இன்றைய தொழினுட்ப உலகில் அனைத்தும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. இதனால் தேடுதல் என்பது அருகி வருகின்றது. வாசிப்பு பழக்கத்தை உடையவர்கள் பிரச்சினைகளை மேற்கொள்ளமாட்டார்கள். சிறந்த நூல்களை வாசிப்பவன். சிறந்த ஓர் நற்பிரஜையாக உருவாக முடியும். இனங்கள் தங்களுக்குள் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வழிமுறையாக வாசிப்பு உள்ளது. வாசிப்பற்றவர்களையும், உலக நடப்புக்களைப் பற்றி அறியாதவர்களையும் சிறிய நூல்களை கூட வாசிக்க தெரியாதவர்கள் ஆக உள்ள ஒரு சில அரசியல் வாதிகளாலே இனப்புரிந்துணர்வின்மைக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. பிரதேசங்களில் உள்ள நூல் நிலையங்கள் திறக்காமல் இருப்பதனால் மக்களிடையே தகவல்கள் செல்வது தடைப்படுகின்றது. இதனால் தான் இனங்களுக்கிடையே புரிந்துணர்வு அற்று காணப்படுகின்றது.

வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி அறிவுடைய சமூகக் கட்டமைப்பினை உருவாக்குவதன் ஊடாக இனப் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும். வாசிப்பு மாதமாகிய ஒக்டோபர் மாதத்தில் மட்டுமல்லாது எல்லா நாட்களும் சிறந்த நூல்களை வாசிப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். இதன் மூலம் நாட்டில் உள்ள இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும். நாட்டில் உள்ள அனைத்து பிரஜைகளும் வாசிப்பை மேற்கொள்ள வேண்டும். வாசிப்பின் மூலம்தான் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும். வாசிப்பானது ஒரு மனிதனை முழுமையாக்கிறது என்பதற்கு இணங்க வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். வாசிப்பு ஒன்றே இனப் புரிந்துணர்வுக்கு தீர்வாகும்.

அ.ஜனுஷா

தரம் - 13 **A**

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல் மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு

- சிக்மண்ட்.ஃப்ராய்ட்

## இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு

எழுதப்பட்ட உரையின் எழுத்துக்களைப் பார்த்து சொற்களைப் புரிந்து, அதில் கூறப்பட்ட கருத்தை உணர்ந்து கொள்வதை வாசித்தல் எனலாம். இவ்வாசிப்பானது எழுத்தறிவின் ஒரு அடிப்படைக் கூறு ஆகும். இன்றைய எமது அன்றாட வாழ்விற்கு வாசித்தல் மிகவும் அவசியமானது எழுத்தறிவின் ஒரு அடிப்படைக் கூறு ஆகும். இன்றைய எமது அன்றாட வாழ்விற்கு வாசித்தல் மிகவும் அவசியமானது ஆகும்.

தமிழர், சிங்களவர், முஸ்லீம், பறங்கியர் என பல் இனம் கொண்ட பசுமைப் படுக்கை, எம்நாடு இலங்கை. தமிழ்மொழி, சிங்களமொழி ஆகிய இரு பிரதான மொழிகளைக் கொண்டு மிளிரும் சிறிய தீவு எம்நாடு மொழியறிவு, எழுத்தறிவு எல்லாம் உயர்வீதத்தில் கொண்ட நாடு எம் இலங்கை.

இறைவனால் படைக்கப்பட்ட அத்தனை உயிர்களில் இருந்தும் மனிதர்களாகிய எம்மை வேறுபடுத்தி காட்டுவது ஆறாவது அறிவான பகுத்தறிவாகும். அன்பு, கருணை, இரக்கம் என்பனவெல்லாம் விலங்குகளிடமும் காணப்படும் பண்பாகும். புரிந்துணர்வு என்பது மனிதர்களாகிய எம்மிடம் காணப்பட வேண்டிய நற் பண்பொன்றாகும். பல இனமக்களும் செறிந்து வாழும் எம் இலங்கைத் திருநாட்டினில் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும். அப்புரிந்துணர்வினை வாசிப்பு ஏற்படுத்துகிறது என்றால் அதுவே உண்மையாகும்.

“வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்’ என்ற கூற்றை நாம் சிறுவயதிலிருந்தே அறிந்து வருகின்றோம். வாசிப்பு என்பது ஓர் கலையாகும். வாசிக்க வாசிக்க எமது புத்தியானது கூராக்கப்படுகின்றது. இதனையே “கண்டதும் கற்கப் பண்டிதனாவான்” என்ற கூற்று எடுத்தியம்புகின்றது.

எமது பாடசாலைப் படிப்பு வேலைக்கான உத்தரவாதம் என்று நம்புகின்றார்கள். ஆனால் வாசிப்பது வாழ்க்கைக்கான ஊட்டம் என்று யாரும் கருதுவதில்லை. கல்வி அறிவைப் போதிக்கும் பள்ளி ஆசான்களுக்கு அடுத்த இடத்தில் இருப்பவை புத்தகங்கள். நம்மை ஏமாற்றாத ஒரு சிறந்த நண்பன் புத்தகம். இந்த நண்பனைத் தமது உயிர் நண்பனாக ஏற்றுக் கொண்டவர்கள் பலர் சாதனையாளர்களாகவும், சிலர் புரட்சியாளர்களாகவும் மாறி புகழின் உச்சியில் அமர்ந்திருக்கின்றார்கள். “புத்தகங்களை வாசிக்கும் பண்பு இருந்தால் சக மனிதர்களையும் நேசிக்கும் பழக்கம் தானாக வரும் என்பார்கள்”“உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” என்ற குறளின் படி எமக்கு உதவிடும் உற்ற தோழன் புத்தகங்களே ஆகும்.

வாசிப்பினால் நாம் அடையும் பேறுகளே எல்லை அற்றவை. வாசிப்பதனால் மூளையின் சிந்திக்கும் ஆற்றல் அதிகரிக்கின்றது. சுறுசுறுப்பு ஏற்பட சோம்பல் விலகுகிறது. மொழி அறிவைப் பெறக்கூடியதாக இருக்கிறது. இவ்வளவு அதிக அளவு எண்ணுக்கடங்காத நன்மைகளை வாசிப்பு

கொண்டுள்ளது. இன்று சமூக வலைத்தளங்களின் தாக்கத்தினால் சிறியோர் முதல் பெரியோர் வரை தொலைபேசியின் தொடுதிரைக்கு அடிமையாகி விட்டார்கள். இதனால் வாசிப்பதற்கு அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. இன்று நாட்டிலே துஷ்பிரயோகங்கள், கொள்கைகள், களவு போன்ற துர்காரியங்களின் குடியேற்றத்தால் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. சுவாமி விவேகானந்தரது கூற்றின் படி "ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படும்" எனவே பொறுமையாக நூல் நிலையம் சென்று வாசிப்பவர்கள் தெருச் சந்திகளில் நின்று வீணான அடாவடித்தனங்கள் செய்வதில்லை.

உலகிலே வாசிப்பினால் உச்சம் தொட்ட பலர் எமக்கு ஆதாரங்களாக இருக்கின்றார்கள். "வேறு எந்த அனுமதியும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பிற்கு மட்டும் அனுமதிக்க வேண்டும்" என்றார். நெல்சன்மண்டேலா "எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றனவோ அங்கு விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்" என்றார். சேகுவாரோ வாசிப்பின் மொழி அறிவு எமக்கு இனங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்துகின்றது.

"யாதும் ஊரே யாவருங் கேளீர்" என்ற வாசகம் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைக் காட்டி நிற்கின்றது. நாம் ஒரு சிங்களவரிடம் உரையாடுவதற்கு சிங்கள மொழி அறிவு வேண்டும். அவ்வாறே சிங்களவர் ஒருவர் தமிழரிடம் உரையாட வேண்டும் என்றால் தமிழ்மொழி அறிவு தேவை. இவை எப்படி சாத்தியமாகும்? என்றால் வாசிப்பதனால் மட்டுமே என்பது விடையாகும்.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்" என்ற பாடல் சகல செல்வங்களையும், புகழ்களையும் கொண்ட மன்னனிற்கு தனது தேசத்தை தவிர வேறு தேசத்தில் புகழில்லை. ஆனால் குற்றமில்லாத கல்வியைக் கற்றவன் எங்கு சென்றாலும் பெருமை அடைவான். இதிலிருந்து கல்விக்கு துணையான முதற்படி வாசிப்பு ஆகும் என்பது தெளிவாகின்றது. இதனால் தான் ஆரம்பப் பிரிவில் நாம் கற்கும் போது எமக்கு வாசிப்பதையே அதிகம் கற்றுக் கொடுப்பதோடு தேர்ச்சிகளிலும் கட்டாயமான ஒன்றாகக் கற்பிக்கின்றார்கள். இத்தகைய வாசிப்பின் மூலம் நாம் மொழி அறிவை விருத்தி செய்வதால் இனங்களுக்கிடையில் உரையாடும் போதும் சிக்கல் தன்மையானது காணப்படாதிருக்கும்.பல இனங்களாகக் காணப்பட்டாலும் "இலங்கை" என்ற வாசகத்தின் கீழ் நாம் அனைவரும் ஒருவர் தான். ஒரு தாய் மக்கள் நாம். ஆகவே நாம் எமக்கிடையிலே புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் எம் அனைவரினதும் வாழ்க்கையானது "கல்மேல் எழுதப்பட்ட எழுத்து போல் என்றும் நிலையானதாகக் காணப்படும். எனவே வாசிப்போம்; அறிவை வளர்ப்போம்; இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவோம்.

ப.தேனுஜன்

தரம் : 13 $C_2$

# விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கு அல்ல

வாழ்க இலங்கை மணித்திருநாடு
வாழிய வாழியவே
வாழ்க சுதந்திரம் வாழிய அன்னை

காற்றில் புதிய வாசனை நுகர்ந்தேன்
என் தாய் மண் கற்று நனைந்ததை உணர்ந்தேன்
விடுதலை மலர்கள் அரும்புவதை அறிந்தேன்
சுகந்திர மேகம் சூழ்ந்ததைக் கண்டேன்
புன்னகை மழையில் நானும் நனைந்தேன்
மூவினத்தவர் கொண்டாடினோர் விழாக்களை
தமிழர், முஸ்லீம், சிங்களவர் வாழும் இலங்கையிலே
எல்லோரும் ஒற்றுமையாக சேர்ந்து வாழும்வோம் வாருங்கள்
வாழ்க்கையில் முன்னிடத்தை பெறுவோம்.
தேடிச் சோறு நிதம் நின்று பல
சின்னச்சிறுகதைகள் பேசி மனம் வாடிக் கண்டு
உழன்று – பிறர் வாடப் பல செயல்கள் செய்து
ஊரைக் கூடிச் ...சிறப்புற செய்து சொல்
கூற்றுக் கிரையான பின் மாயும் பல
வேடிக்கை மனிதரைப் போல் நான் வீழ்வேனென்று
நினைத்தாயோ
சேர்வது மிகக் கடினம் பிரிவது மிக எளிது
நாம் சேர்ந்து வாழ்ந்து நம் திரு நாட்டை
ஒற்றுமையாக்குவோம்.

நி.சானுஜன்
தரம் 8 C
யா.சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## இனங்களுக்கிடையிலான ஒற்றுமை

ஒற்றுமை என்பது நான்கெழுத்து
அதன் பயனோ பல எழுத்து
வேற்றுமை என்பதை தவிர்த்து விட்டால்
ஒற்றுமை உடனே வாழ்ந்திடலாம்

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ

எவர் உடனிலும் - சிவப்பு
இரத்தமே பாய்கிறது
எவர் வீழி நீரும் - உவர்ப்பே
இவை இயற்கை

இனம் மதத்துடன் - எவரும்
பிறப்பது உண்டோ
இனமனைத்து ஒற்றுமையால்
விளங்கும் நன்றாய் உலகமன்றோ!

துணையின்றி வெண்புறா
தனியாக வந்ததே
வனவேடன் வீசிய வலை தனில்
வீழ்ந்ததே

இனம் யாவும் சேர்ந்து தான் அதை
மீட்டுச் சென்றதே
கதையான போதிலும் கருத்துள்ள
பாடமே

ஒற்றுமையாய் வாழ்வதாலே
உண்டாகும் நன்மையே
வேற்றுமையை வளர்ப்பதால்
விளையும் தீமையே

இனத்துக் கிடையே உதவி
செய்து வாழ வேண்டும்
இனத்துக் கிடையே ஒற்றுமை
தழைக்க வேண்டும்

இ.டிலக்ஷன்
தரம் 8 C

பல ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன்
இருந்தால் அவனைக் காட்டுங்கள் - அவனே
எனது வழிகாட்டி

\- ஜீலியர்சீசர்

# இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வாசிப்பு

மழையாக தூவும் மலர்கள்
எமை மாற்ற எழுத்தாக மாறும்
இமையாக மூடும் கதவுகள்
எழுத்தில் உள்ள ஊற்றாய் மாறும்

பாவை ஒன்று அன்னமதை கேட்க
நீ கூறேன் என்ற அன்னம் - இன்று
புரிந்து கொண்டது
ஒரு நூலினைப் பற்றி

நேர் நேரே எழும் சந்தோசங்கள்
கோவையாக கோர்க்கும் வினாக்கள் என
பயிலும் பழக்கம்
ஒழுக்கமதை கற்று
என்றும் இவைக்கு
விடையாக நூல்கள்

எவ்வாறு!!!

புரிதலின்றி தோன்றும்
முரண்பாட்டினை தீர்க்க
இனங்களிடையே தோன்றும்
கருத்து வேறுபாட்டினையும் குறைக்க
மனமோ சமாதானமா என்றுமே
அங்கமாய் மாறும் நூல்கள்

உண்மையை விளக்க

அரிச்சந்திர புராணம்
உவமைக்கு எடுத்துக் காட்டாய்
சாண்டியன் கதைகள்

அறிவிற்கு தீனியாய்
அறிவியல் நூல்கள்
இலங்கையை உணர்த்தும்
அரசியல் நூல்கள்
தேவையின் கருத்தென்
தேடும் ஓர் பாவைக்கு
இம்மையையும் மாற்றும்
இன்றியமையா சிந்தனைகள்

பாரினில் உயர்ந்து விட
பாடமதை வென்று விட
முரண்பாடு தனை தீர்த்து கொள்ள
முயன்று தனை நாம் உயர்வோம்

நூல்கள் தனை கற்றிட்டால்
நூறு கோடி வசந்தமதை
சந்தோசமாக பெற்றிடுவோம்.

கிருபானந்தன் மகிளினி

தரம் 12 **M**

உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதே இல்லை

\- ஆஸ்கார் வைல்ட்

## இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை மேற்கொள்ளும் வாசிப்பு – கவிதை

ஆதிகாலமது ஆணும் பெண்ணும் மட்டுமே இனங்களாகும்
கூடி அவர்கள் வேட்டையாடி கொடுத்துண்டு வாழ்ந்தனராம்
தாய்வழி மரபு போற்றி கொற்றவை ஆண்டாளாம்
விவசாய யுகமதிலே சொத்தாளாப்பழகி சுயநலம் கொண்டனராம்

நாடு எனது மண் எனது என்ற அகங்காரத்தில்
படை கொண்டு போர் தொடுத்து பல் உயிர் கொன்றனராம்
கூடி உண்டு மகிழ்ந்தகுடி இனம் பிரிந்து தமக்குள் முட்டி மோதினவாம்
யாவரும் ஒன்று என்பதே எம்வழி மரபு என அறிய மறந்து விட்டனரே

வரலாறு மாற்றி எழுதினர் பிரிவினை உருவாக்கினர்
ஆதிமூல நூல் தேடு நாம் மெல்லாம்
ஒரு தாய் வயிற்றின் பிள்ளைகள் என்பதனை நீ உணர்வாய்
ஆதிகுடியில் நாமெல்லாம் ஓர் இனமே

அறிவைத்தேடு ஆயிரம் பொக்கிஷமாய் புத்தகங்கள் உண்டு
நீ தேடும் நூல் எல்லாம் உன்னை மனிதனாய் ஆக்கும் ஆயுதமாகும்
நற்குடி மக்கள் நாம் வாழ மனிதம் தளைத்தோங்க
புத்தியை தீட்டு அது வழி செய்யும் நீ மனிதனாவாய்

நீதிநூல் எனவும் அறம் பேண பல நூல்களை
எம் முன்னோர் நமக்களித்து சென்றதெல்லாம்
பெருவிரல் கலாச்சார கைத்தொலைபேசியில் அழிய விடலாமா?
அறம், பொருள், இன்பம், வீடு அத்தனையும் அணுவணுவாய்
செப்பனிட்டு வாழ்ந்தவர் வரலாறும் நம்மிடமுண்டு
எல்லாம் மறந்து உலகம் நமக்கடிமை என்ற மமதை
தலைக்கேறி சுருண்டு சின்னாபின்னமாகும் நிலைதான் வேண்டுமா?

போரிட்டு அழிந்த காலம் போதும்
ஓற்றுமை உலகை வென்றெடுத்து வெற்றி வாகை சூடுவோம்
வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்பதனை
உலகாளச் செய்திடுவோம்

மானிடர் என்பதே ஓர் இனம் என்று
பறைசாற்றி பகுத்தறிவாய் வாழ்ந்திட
ஆடி வேரூன்றி கற்கும் கலாச்சாரத்தை மீட்டெடுப்போம்.

செல்வி. தயாகரன் கிருசானி
தரம் - 12 (கலை)

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே

- லெனின்

## ஆசிரியமும் வாசிப்பும்

எந்த வகையான கல்விக்கும் நூலகமே ஆதாரம். துரித ஆசிரிய வாண்மை விருத்திக்கு வாசிப்பு உதவுகின்றது. தொலைக்காட்சி, கணினி போலன்றி நூல் வாசிப்பு மூளையை அறிவார்ந்த ரீதியில் செயலூக்கம் செய்கின்றது. சமநிலை ஆளுமை பேண உதவுகின்றது. ஞாபக சக்தியை மேலிடுகின்றது. சுய கட்டுப்பாட்டை வாசிப்பு வளர்க்கின்றது. மனதை ஒரு நிலைப்படுத்த உதவுகின்றது. ஆக்கத்திறன் விருத்திக்காக நாமும் புதிய கட்டுரைகளை இலக்கிய ஆக்கங்களை எழுத முடிகின்றது. மன அழுத்தங்களைக் குறைத்து ஆசிரியத்துவ வாழ்க்கையை சிறப்பாக மாற்றியமைத்து சிறந்த நல்லாசிரியர்களை உருவாக்கும் மிகச் சிறந்த சாதனம் நூல் வாசிப்பாகும்.

Development zone எனப்படும் எட்டும் இடைவெளியை ஆசிரியர்கள் அடைய முடியாமலிருப்பதற்குரிய காரணிகளுள் ஒன்று ஆசிரியர்களிடம் காணப்படும் வாசிப்பு பண்பாட்டில் வீழ்ச்சியேயாகும். வாசிப்பு அதன் பிரயோகமும் கற்றல் கற்பித்தலில் நேரடியான எழுச்சியை ஏற்படுத்த வல்லவை. ஆசிரியத்துவ வாசிப்பு குன்றிய நிலையில் இருக்கும் போது உள்ளடக்க கையளிப்பும் குன்றிய நிலையில் இருக்கும் என்று வெளிப்படை.

ஆசிரியர்கள் வாசிப்பில் ஈடுபடாமை இருப்பதற்குரிய காரணம். வேலைப்பளு, குடும்பசுமை, நேரமின்மை, அதிகரித்த பதிவேடுகள், ஆவணப்படுத்தல்கள். எனினும் நேரமுகாமை ஆற்றலை வளர்த்துக் கொண்டு ஆசிரியர்கள் வாசிப்பில் ஈடுபடல் வேண்டும்.

கல்வி தொடர்பான எழுத்தாக்கங்களில் ஆசிரியரை ஈடுபடச் செய்வதால் வாசிப்பாற்றல் இயல்பாகவே அவர்களிடத்தே மேலுயர முடியும்.

இன்றைய சிறார்கள் நாளைய உலகினை ஆளப்போகும் பிள்ளைகளை வழிப்படுத்தும் பாரிய பணியினை நிறைவேற்றும் ஆசிரியத்துவம் வாசிப்பில் ஈடுபடுவதன் மூலம் அறிவார்ந்த உடல்,உள ஆரோக்கியமான வளமான சமூகம் உருவாகும். இதற்கு கல்விப் புலத்தில் உள்ள அனைவரும் முன்வர வேண்டும்.

லோ. சிவாநிதி

ஆசிரிய நூலகர்

உலக வரைபடத்தில் உள்ள

மூலை முடுக்கெல்லாம் போக விரும்புகிறாயா

ஒரு நூலகத்திற்கு செல்

- டெஸ்கார்டஸ்

# <u>தேசிய வாசிப்பு மாத போட்டியில் பங்கு பற்றி சான்றிதழ் பெறுவோர்</u>

<u>கட்டுரைப் போட்டி</u>

| பிரிவு | தரம் | பெயர் |
|---|---|---|
| பிரிவு-01 | 07 | செ.ஆரபி |
| | 07 | த.கஜேனி |
| | 07 | இ.இளஜயன் |
| பிரிவு-02 | 09 | பு.கிருசாலி |
| | 09 | வி.பானுஜா |
| | 09 | சி.வணோஜா |
| பிரிவு-03 | 11 | பு.வைசாலி |
| | 11 | ஜெ.ஜெயமதுரா |
| | 11 | ர.மதுஷனா |

<u>பேச்சுப் போட்டி</u>

| பிரிவு | தரம் | பெயர் |
|---|---|---|
| பிரிவு-01 | 07 | பி.கவிசாயினி |
| | 07 | செ.ஆரபி |
| | 07 | த.கஜேனி |
| பிரிவு-02 | 08 | ர.கிசாந் |
| | 08 | தி.ஆர்த்திகன் |
| | 08 | க.சதுர்சன் |
| பிரிவு-03 | 10 | ம.வீணஜா |
| | 10 | பி.குகப்பிரியா |
| | 11 | மு.தர்மியா |
| பிரிவு-04 | வர்த்தகப் பிரிவு | ம.கீதாஞ்சலி |
| | உயிரியல் பிரிவு | கி.மகிளினி |
| | வர்த்தகப் பிரிவு | ப.தேனுஷன் |

கவிதைப் போட்டி

| பிரிவு | தரம் | பெயர் |
|---|---|---|
| பிரிவு-02 | 08 | தி.சானுஜன் |
| | 08 | இ.டிலக்சன் |
| பிரிவு-04 | உயிரியல் பிரிவு | கி.மகிளினி |
| | கலைப் பிரிவு | த.கிருசானி |
| | வர்த்தகப் பிரிவு | ப.தேனுஷன் |

## நூல்களாகிய தோழர்களே நேசமிகு நண்பர்கள் பதக்கங்களுக்கான நிகழ்ச்சித் திட்டத்தில் வலயமட்டத்திற்கு தெரிவானோர் விபரம்

| தரம் | மாணவர் பெயர் |
|---|---|
| 09 | ஆர்த்திகா ஸ்ரீகாந்தா |
| 09 | பானுஜா விமல்சன் |
| 09 | அனற் ஜென்சிகா இராஜகுமார் |
| 09 | கம்சிகா தவக்குமார் |
| 09 | சாம்பவி சற்குணராசா |
| 09 | கிம்சியா சிவகுமார் |
| 09 | நிரோசிகா தயாகுமார் |
| 09 | ஆரதி நகுலேஸ்வரன் |
| 09 | கிருசாலி புனிதநாதன் |
| 09 | சகானா கோகிலரூபன் |

## நூல்களாகிய தோழர்களே நேசமிகு நண்பர்கள் நிலையான வாசிப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் வலயமட்டத்திற்கு தெரிவானோர் விபரம்

| தரம் | மாணவர் பெயர் |
|---|---|
| 10 | மகேந்திரகுமார் வீணஜா |
| 11 | புனிதநாதன் வைசாலி |
| 11 | ஜெயகணேசன் ஜெயமதுரா |
| 13 (கலை) | அருள்பிரகாசம் ஜனுசா |
| 13 (கலை) | சர்வானந்தம் சுலக்சனா |

இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை மேற்கொள்ளும் வாசிப்பு

# நன்றியுடன் ...

எமது கற்றல் வளநிலையத்தின் வெளியீடாக இன்று "விடியல்" என்னும் இச்சிறு சஞ்சிகை உங்கள் கரங்களில் தவழ்கின்றது. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப் படும் இச்சஞ்சிகை சிறப்பாக அமைய ஆக்க பூர்வமான விமர்சனங்களை எதிர்பார்த்து நிற்கின்றோம்.



ஓவியன்
வி.கார்த்திகேயன்
தரம் 12
கலைப்பிரிவு

இச்சஞ்சிகை யா\சாவகச்சேரி இந்துக்கல்லூரி கற்றல் வள நிலையத்தினால்

05.11.2018ஆம் திகதி வெளியிடப்பட்டது.